**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I - 2020**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 103,280 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 804.11 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 87,788 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 683.49 மில்லியன் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 15,492 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 19 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 ஜூலை 18 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடா்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடா்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடா்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு மீது செலுத்த வேண்டிய தாமத வட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொன்டனர். | ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 3.56 மில்லியனான ஓர் தொகை நடைமுறைப்பொறுப்பின் கீழ் செலுத்தவேண்டிய ரத்துச்செய்யப்பட்ட காசோலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும் இம்மீதியை உறுதிப்படுத்த ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்கு காணப்பட்டிருக்கவில்லை. | முறையான பதில் வழங்கப்படும். | ரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் ஆவணச்சான்றுகளுடன் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | ஆலோசகரினால் உரிய திகதிகளில் அனைத்து இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களினதும் செலுத்தப்படாமை காரணமாக ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 14.7 மற்றும் 14.8 இன் பிரகாரம் தாமத வட்டி மீதான பெறுவனவாக ரூபா 574.27 மில்லியனான ஒரு தொகையினை உறுதிப்படுத்தியிருந்தார். இருப்பினும் மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றில் அவ்வாறான கொடுப்பனவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொன்டனர். | ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் என்பனவற்றிற்கிடையே சட்டரீதியான இழப்பீட்டு கொடுப்பனவுகள் மற்றும் சட்டரீதியான வட்டிக்கொடுப்பனவுகள் என்பன மீது முறையே ரூபா 35.24 மில்லியன் மற்றும் ரூபா 49.48 மில்லியன் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | முறையான பதில் வழங்கப்படும். | காணி சுவீகரிப்புக்களுடன் தொடர்புபட்ட இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் பராமரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஒப்பந்தத்திற்கான கடன் உடன்படிக்கையின் உபபிரிவு 2.7 இன் பிரகாரம் கடன் பெறுனர் கடன் வசதிகளின் வரையப்படாத மற்றும் ரத்துச்செய்யப்படாத மீதிகள் மீது கடன் கொடுனரிற்கு ஒப்படைப்பு கட்டணம் செலுத்த வேண்டும். இருப்பினும் செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளிற்கான ஐ.அ.டொலர் 19.51 மில்லியன் மற்றும் கண்கானிப்பு ஆலோசனையிற்கான ஐ.அ.டொலர் 61.08 மில்லியன் போன்றனவற்றின் கடன் தொகைகளின் நிலுவை மீதிகளிற்கு எதிரான ஒப்படைப்பு கட்டணங்களிற்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | பொதுத்திறைசேரி 2020 திசெம்பர் 31 இலான திகதியிலுள்ளவாறு செயற்திட்டம் சார்பாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவேண்டிய ஒப்படைப்பு கட்டண தொகையினை அறிவித்திராததனால் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

**3 பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடனின் இருப்புக்காலம் 2020 ஒக்டோபர் 25 இல் காலாவதியாகி இருந்தும், சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவு 2021 ஒக்டோபர் முடிவில் கூட இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 4,045 மில்லியன் துணை ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் அது 2021 ஒக்டோபர் 31 வரை கூட நிர்மானத்திற்கான இறுதி பட்டியலினை செலுத்தியிருக்கவில்லை. | ஒப்பந்த போட்டியிற்கு தேவையான நேர காலம் 2021 ஏப்ரல் 30 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். கோவிட் 19 நோய்த்தொற்று பரவல் நிலைமை மேற்கூறிய படிமுறைகளின் பூர்த்தியாக்கலினை அதிகமாக பாதித்திருந்தது. | எதிர்கால ஒப்பந்தங்களில் நிர்மானங்களின் இறுதிப்பட்டியலின் பூர்த்தியாக்கலினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டமானது உத்தியோகத்தர்களின் போக்குவரத்து பாவனைக்கான 04 டொயோட்டா போட்டுனா வாகனங்கள், 1 மேர்ச்சன்டீஸ் பென்ஸ் வான் மற்றும் 10 பிக்கப்கள் போன்றனவற்றிற்கான சுங்கத்தீர்வை சலுகைக்கான ஒப்பந்ததாரரின் உரிமம் ஒப்பந்ததாரர் அவ் வாகனங்களை வேலை வழங்குனரிடமிருந்து முன்அனுமதி | ஜீசீசீ இன் உபபிரிவு 20.2 இன் பிரகாரம் பிணக்கு இணக்க சபை (டிஏபி) செயற்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது அதன்படி உரிய கொடுப்பனவுகள் டிஏபி மற்றும் சினேக பூர்வ தீர்பனவு குழு (ஏஎஸ்சி) என்பனவற்றினால் வழங்கப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டதனால் ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தது. | சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தினை எடுப்பதனூடாக மேலதிக கிரயத்தினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறாமல் இறக்குமதி செய்ததன் காரணமாக மறுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்திற்கு, பின்னர் 02 டொயோட்டா போட்டுனா வாகனங்கள் மற்றும் 10 பிக்கப்களிற்காக ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்ட சுங்கத்தீர்வை ரூபா 91.74 மில்லியன் மற்றும் 2018 ஏப்ரல் 23 இல் பிணக்கு இணக்க சபையின் தீர்மானத்தின் அடிப்படையிலான தாமத கொடுப்பனவுகளிற்காக செலுத்தப்பட்ட வட்டி ரூபா 27.55 மில்லியன் கூட மீளுப்பெறப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்ததாரரிற்கு சாதகமாக செய்யப்பட்ட மேற்கூறிய தீர்மானத்தின் பெறுபேறாக கூட்டுமொத்தம் ரூபா 119.3 மில்லியன் செயற்திட்டத்தினால் மேலதிக கிரயமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | காணி சாத்தியவள கற்கை அறிக்கையின் பாகம் 8.33 இன் பிரகாரம் ஓர் சேவைப்பிரிவினை நிர்மானிக்க கதமனவிலுள்ள ஓர் சேவை பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அது மதிப்பிடப்பட்டிருக்காததுடன் சேவைப்பிரிவினை நிர்மானிக்க எவ்வித பீஓகியுவ் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீ களின் பின்னர் அதிவேகப்பாதை பயன்பாட்டாளர்களிற்காக எவ்வித சேவைப்பகுதியும் காணப்பட்டிருக்கவில்லை. | மும்மொழியப்பட்ட சேவைப்பகுதி ஆரம்பகட்ட வரைபுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தும் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சுவீகரிப்பு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. சீஎச் 22+700 கி.மீ தொடக்கம் 22+900 கி.மீவிலுள்ள கதமனவிலுள்ள சேவைப்பிரிவின் நிர்மானத்திற்கு தேவையான காணியின் சுவீகரிப்பினை அது பெறுபேறாக்கியது. எனவே சேவைப்பகுதியின் நிர்மானம் வேறொரு நிதியளிப்பு ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்த வேண்டியிருந்தது. | சாத்தியமான அளவு விரைவில் சேவைப்பகுதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்தபொது நிபந்தனைகளின் உபபிரிவு 20.6 ஆனது நடுவர்தீர்ப்பு வேலைகள் பூர்த்தியாவதற்கு முன்னர் அல்லது பின்னர் ஆரம்பிக்கப்படலாம் என கூறப்பட்டிருந்தும் ஓர் குறிப்பிட்ட நேர காலம் திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பினை ஆரம்பிக்க ஒப்பந்த குறித்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே ரூபா 2,396.7 மில்லியன் தொகையான 5 பிணக்குகளின் பெறுகைகள் திருப்தியின்மை அறிவிப்புக்கள் | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் நடுவர் தீர்ப்பிற்கான பிணக்கனை கூற எவ்வித நேர வறையரையும் இல்லை. இருப்பினும் ஜீசீசீ இன் உபபிரிவு 14.12 இன் பிரகாரம் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தும் இறுதி கூற்றின் மொத்தம் மற்றும் ஒப்பந்தத்தின் கீழாக அல்லது ஒப்பந்தத்துடன் தொடர்புபட்டு ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய அனைத்து காசுகளினதும் இறுதிக்கூற்றினை | திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ஓர் குறித்த நேர வரையறை நடுவர் தீர்ப்பினை ஆரம்பிப்பதற்காக குறித்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பிற்காக இன்னும் திறந்துள்ளதுடன் ஒப்பந்ததாரரிற்கான உரிமை செயற்திட்டத்தின் குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதி பூர்த்தியானதிலிருந்து 12 மாதங்கள் காலாவதியானதன் பின்னர் கூட இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இதனால் வெளியேற்றல் கடிதம் 2021 ஒக்டோபர் 31 வரை கூட ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான ஒரு வெளியேற்றத்தினை சமர்ப்பிப்பார். | |
| (உ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெறுவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி 2020 ஜுலை 31 வரை கூட்டுமொத்தம் ரூபா 322.8 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெறுவதற்கு ஒப்பந்ததாரரிற்கு பீஓகியுவ் பெறுமதி 97.8 மில்லியன் அதிகரிப்பதன் மூலம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த பீஓகியுவ் வில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயம் மற்றும் அனைத்து ஏனைய தேவையான முறிகள் போன்றவற்றிற்கான அனுமதி கொடுப்பனவு உருப்படி 107(2) இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இவ் உருப்படி ஓர் ஏற்பாட்டு மொத்தமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே வேலை வழங்குனரின் எண்ணம் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதன் நோக்கத்திற்காக ஓர் கொடுப்பனவை செய்வதாக இருந்தது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | காணி சுவீகரிப்பு செயன்முறை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயன்முறையினை விரைவுபடுத்த உத்தியோகத்தர்களிற்காக ரூபா 29.67 மில்லியன் ஊக்குவிப்புக்களாக செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,666.8 மில்லியன் தொகை 2120 காணித்துண்டுகளிற்கான இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 275.5 மில்லியன் 920 காணித்துண்டுகளிற்கான தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | முறையான பதில் வழங்கப்படும். | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |